# <u>பொருள்கள்</u>

1. இந்நகராட்சிக்கு 21 எண்ணம் டம்பர் பின்கள் சுத்தம் செய்து தரமான முறையில் பழுது நீக்கி வர்ணம் பூசி ஒப்படைக்கும் வேலைக்கு வருவாய் நிதியின் கீழ் 15.09.2011 தேதிய நகர்மன்றத்தீர்மான எண்.677– ன் படி அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3.50 இலட்சத்தில் 01.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு.வி.ஜோசப் அருள் ராஜ் (–) 15.86 % மதிப்பீட்டைவிட குறைவு

2. Southern Solidwaste Management Service, Chennai – 59 (-) 14.80% மதிப்பீட்டைவிட குறைவு

**அலுவலக குறிப்பு –** 1. வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.வி. ஜோசப் அருள் ராஜ் (–) 15.86 % மதிப்பீட்டைவிட குறைவு கொடுத்துள்ளமையால், மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள தொகை ரூ.55,500/– ல் 50 % தொகையான ரூ.27,750/– ஐ பொதுப்பணித்துறை முதன்மை பொறியாளர் செயல்முறை உத்தரவு எண்.டி1/50 CR/C – 10*/2006 – ன் படி கூடுதல் வைப்புத்தொகையாக செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் அறிவிப்பு பெறப்பட்ட 7 தினங்களுக்குள் கூடுதல் வைப்புத்தொகை ரூ.27,750/– ஐ நகராட்சியில் செலுத்தி வேலை உத்தரவு பெற்று கொள்ளப்படாத நிலையில் மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஒப்பந்தக்காரரின் வைப்புத்தொகையினை பறிமுதல் செய்யவும் மேற்படி பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ம.எண்.121/2011–2012

**தீர்மான எண் : 76 – அனுமதிக்கப்பட்டது.**

2. நாகர்கோவில் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக 24.27 சதுர கிலோ மீட்டர்பரப்பளவுடன் 51 வார்டுகளாக செயல்பட்டு வந்தது. இந்நகராட்சியின் நகரமைப்பு பிரிவு 5 நகரமைப்பு ஆய்வாளர் பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒரு முதுநிலை நகரமைப்பு அலுவலர் தலைமையில் ஐந்து நகரமைப்பு ஆய்வர்கள், ஐந்து சங்கிலியாளர்கள், ஒரு நகர சார் ஆய்வாளர் இரண்டு புல உதவியாளர்கள், ஒரு உதவியாளர், இரண்டு இளநிலை உதவியாளர்களை கொண்டு செயல்பட்டு வந்தது.

அரசு ஆணை ( நிலை ) எண்.281 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கும் துறை ( தேர்தல் ) நாள் 09.11.2011 மற்றும் அரசாணை நிலை எண்.17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கும் ( தேர்தல் ) துறை நாள் 14.01.2011 ஆகியவற்றின்படி இந்நகராட்சியின் அருகாமையிலுள்ள கரியமாணிக்கபுரம், பெருவிளை, வடக்கு சூரங்குடி, காந்திபுரம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் ஆசாரிபள்ளம் பேரூராட்சியும் உள்ளடக்கிய பகுதிகளையும் இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்டு 52 வார்டுகளாக எல்கைகளை மறு நிர்ணயம் செய்து அதன்படி உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது.

தற்போது நகரமைப்பு பிரிவில் செயல்பட்டு வரும் பணியமைப்பு 24.27 சதுர கிலோமுட்டர் பரப்பளவாகவும், 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 2,08,149 ஆகவும் அப்போதைய விகிதாசாரத்தின்படி பணியிட அனுமதி பெறப்பட்டதாகும். தற்போது எல்கை விரிவாக்கத்தின்படி

இந்நகராட்சியின் பரப்பளவு 49.10 சதுரகிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. தற்போது 2010 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,54,129 ஆக உயர்ந்துள்ளது.

தற்போதைய நகராட்சியின் பரப்பளவு இருமடஙகாக உயர்ந்துள்ளதாலும், மாவட்டத்தின் மையப்பகுதியாக உள்ளதாலும், விரைவாக வளர்ந்து வரும் நகரமாக உள்ளதாலும் பணிச்சுமையும் அதிகரித்துள்ளது. எனவே நகரமைப்பு பணிகளை சரிவர செய்து பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் பணியாற்ற அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ள அளவு கோல் ( Norms) படி முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடம் நீஙகலாக கீழ்க்கண்ட பணியிடஙகள் கூடுதலாக தேவைப்படும்.

| வரிசை எண் | பணியிடத்தின் பெயர் | தற்போது அனுமதிக்கப் பட்ட பணியிடம் | Norms – படி அனுமதிக்க வேண்டியது | கூடுதலாக தேவைபடுவது |
|---|---|---|---|---|
| 1 | உதவி நகரமைப்பு அலுவலர் நிலை –2 | – | 1 | 1 |
| 2 | நகரமைப்பு ஆய்வாளர்கள் | 5 | 8 | 3 |
| 3 | சஙகிலியாள் | 5 | 8 | 3 |
| 4 | இளநிலை உதவியாளர் | 2 | 5 | 3 |

மேற்படி நகரமைப்பு பிரிவில் கூடுதல் பணியிடஙகள் தோற்றுவிக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அலுவலக பணியினை துரிதமாக செய்து பொதுமக்கள் பணிகளை சுணக்கமின்றி முடிக்க வேண்டியுள்ளதை கருத்தில் கொண்டு மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

2. மேற்படி பணியிடஙகளை தோற்றுவிக்க அரசு அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.19976/2011/சி1

**தீர்மான எண் : 77 – அனுமதிக்கப்பட்டது.**

3. நாகர்கோவில் நகராட்சி காந்திஜி நூற்றாண்டு நினைவு மருத்துவமனை மருந்தகத்திற்கு 2011–2012 – ம் ஆண்டிற்கு தேவையான மருந்துகள் மருத்துவ அலுவலரின் அறிக்கைப்படி, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், ஆசாரிபள்ளம், நாகர்கோவிலில் இருந்து வாஙகவும் அதற்காக ஏற்படும் உத்தேச செலவுத்தொகை ரூ.63,000/– ( அறுபத்து மூன்றாயிரம் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.022556/2011/எச்.1

**தீர்மான எண் : 78 – அனுமதிக்கப்பட்டது.**

4. 15.12.2011 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் வடசேரி பேருந்து நிலையம் அருகில் உள்ள பெருமாள் குளத்தின் கிழக்குபுறம் பொதுமக்கள் வசதிக்காக நடைபாதை அமைக்கவும் மற்றும் சின்டெக்ஸ் மற்றும் டாய்லெட் அமைக்கவும் கூறினார்கள். மேற்படி நடைபாதை அமைக்க மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையை மாவட்ட ஆட்சித்தலைவர் வளர்ச்சி நிதியிலிருந்து வழஙக அனுமதி வேண்டப்படுகிறது.
<u>**அலுவலக குறிப்பு –**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.22690/2011/இ1

**தீர்மான எண் : 79 – அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சி பகுதியில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க வேண்டி உலக்கையருவி திட்டத்தின் மூலம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதில் போதிய நீராதாரம் இல்லையென அரசாணை நிலை எண்.139 நாள் 10.08.2009 – ன் படி இத்திட்டம் சட்டசபைக் குறிபிப்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது.

நாகர்கோவில் நகராட்சியுடன் தற்போது கரியமாணிக்கபுரம், காந்திபுரம், வடக்கு சூரஙகுடி, பெருவிளை, ஆசாரிபள்ளம் ஆகிய பகுதிகள் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளன. மொத்த மக்கள் தொகை 2,46,573 மற்றும் வந்து செல்வோர் எண்ணிக்கை சுமார் 50,000 இவர்களுக்கும் சேர்த்து குடிநீர் வழஙக வேண்டியுள்ளது. தற்போது இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. ஆகவே இந்நகர் பகுதிகு 58.5 MLD தண்ணீர் தினமும் தேவைப்படுகிறது. முக்கடல் அணை மற்றும் உள்ளூர் நீராதாரம் இவைகளிலிருந்து தினசரி 21 MLD மட்டுமே எடுக்கப்படுகிறது. எஞ்சிய 37.5 MLD –க்கு வேறு நீராதாரம் தேட வேண்டியுள்ளது, 30.11.2011 அன்று புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தில் முதலாவது தீர்மானமாக மேற்படி உலக்கையருவி குடிநீர் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து அத்திட்டம் சம்மந்தமாக 11.12.2011 அன்று மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் நகர்மன்ற தலைவர் மற்றும் பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடன் உலக்கையருவியிலிருந்து குடிநீருக்கு தண்ணீர் எடுக்க பார்வையிடப்பட்டது.

இந்நகராட்சிக்கு கண்டிப்பாக கூடுதல் குடிநீர் தேவைப்படுவதால் மேற்படி உலக்கையருவியிலிருந்து நாகர்கோவில் நகராட்சிக்கு தேவையான தண்ணீர் கொண்டு வரவும் மேற்படி திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உரிய துறைகள் மூலமாக நிறைவேற்றவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு –**</u> 1. நகரின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு உலக்கையருவி குடிநீர் திட்டத்தை செயல்படுத்தவும் அதனை நிறைவேற்ற ஆகும் செலவினத்தை மானியம் மற்றும் கடன் தொகையாக நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக பெற அரசை கோர மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி உலக்கையருவி திட்ட அறிக்கைக்கு திட்ட ஆலோசகர் நியமிக்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2566/2011/இ2

**தீர்மான எண் : 80 – அனுமதிக்கப்பட்டது. குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனராக பொறியாளர் கூட்டு ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அரசாணை எண்.139, நாள் 10.08.2009.ன்படி மேற்படி திட்டம் சட்டசபை குறிப்பிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழக அரசு மீண்டும் நகராட்சியின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு உலக்கையருவி திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மன்றத்தால் முடிவு செய்யப்பட்டது.**

6. 15.12.2011 அன்று மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் இந்நகராட்சியில் சர்.சி.பி.இராமசாமி பூங்காவினை பராமரித்து நடைபாதை அமைக்க கூறினார்கள். அதன்படி நடைபாதை அமைக்க மதிப்பீடு ரூ.15.30 இலட்சத்திற்கு தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை மாவட்ட ஆட்சிதலைவர் வளர்ச்சி நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.22691/2011/இ1

**தீர்மான எண் : 81 – அனுமதிக்கப்பட்டது.**

7. நாகர்கோவில் நகராட்சி 24.27 சதுர கிலோமீட்டர் பரப்பளவை கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வந்தது. தற்போது அரசாணை எண்.17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் ( தேர்தல் ) துறை நாள் 14.01.2011 – ன் படி நாகர்கோவில் நகராட்சியை ஒட்டியுள்ள ஆசாரிபள்ளம் பேரூராட்சி, பெருவிளை ஊராட்சி, வடக்கு சூரன்குடி ஊராட்சி, காந்திபுரம் ஊராட்சி மற்றும் கரியமாணிக்கபுரம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளை நாகர்கோவில் நகராட்சியுடன் சேர்க்கப்பட்டு அதன் பரப்பளவு தற்போது 49.10 சதுரகிலோ மீட்டராக பரப்பு விரிவடைந்துள்ளது. நாகர்கோவில் நகராட்சியின் பரப்பு முன்னதைவிட தற்போது இரு மடஙகாக விரிவடைந்துள்ளதால் நகரமைப்பு பணிகள் இன்றியமையாத பணி என்பதால் , நகரமைப்பு பணிகளை விரைந்து முடிக்கவும், நகரமைப்பு பணிகளை சரிவர செய்ய வேண்டியுள்ளதால், நகரமைப்பு பிரிவுக்கு வாகனம் ( ஈப்பு ) அத்தியாவசிய தேவையாக உள்ளதால் ஈப்பு ஒன்று ரூ.6.00 லட்சம் செலவில் வாஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – நகரமைப்பு பிரிவு பணிகளை சரிவர கவனிக்க வேண்டியுள்ளதாலும் , நகரமைப்பு பணிகளை உடனுக்குடன் முடிக்க வேண்டியுள்ளதாலும், நகரமைப்பு பிரிவுக்கு ரூ.6.00 லட்சம் செலவில் )ஈப்பு ( வாகனம் ) வாஙக மன்றம் அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண்.19987/2011/இ1

**தீர்மான எண் : 82 – அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி ஆணையரது அறையில் உள்ள அவசர விளக்கிற்கான 800 VA – 12 V பேட்டரி பழுதாகி செயல்படாத நிலையில் உள்ளதை புதியதாக பொருத்திட பழைய பேட்டரி விலையும் சேர்த்து 09.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி விபரம் | புதிய பேட்டரி விலை | பழைய பேட்டரி விலை |
|---|---|---|---|
| 1 | அஜந்தா சீட் மெட்டல்ஸ், நாகர்கோவில் | 15300 – 500 = 14800 | |
| 2 | பிரிமியர் பவர் எலக்ட்ரானிக்ஸ், சென்னை | 15900 – 400 =15500 | |

**<u>அலுவலக குறிப்பு</u>** – மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை ( பழைய பேட்டரிக்கான விலையை கழிவு செய்து) ரூ.14800/– க்கு கொடுத்துள்ள அஜந்தா சீட் மெட்டல்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு –</u>** அனுமதிக்கலாம். கோப்பு எண்.10532/2011/இ3

**தீர்மான எண் : 83 – அனுமதிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சிக்குட்பட்ட இருளப்பபுரம் பிரதான சாலை மற்றும் வடலிவிளை சன்னதிதெருஆகிய சாலைகள்மழையினால் சேதமடைந்து குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால், மேற்கண்ட சாலைகளில் தார் ஒட்டும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3,00,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.22560/2011/இ1

**தீர்மான எண் : 84 – அனுமதிக்கப்பட்டது.**

10. இந்நகராட்சிக்குட்பட்ட அவ்வை சண்முகம் சாலை மற்றும் வாகையடி ரதவீதி சாலைமழையில் மிகவும் பழுதடைந்து போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு சிரமமாக உள்ளதால் மேற்கண்ட சாலைகளில் தார் ஒட்டும் பணி மேற்கொள்ள உத்தேசமதிப்பீடு தொகை ரூ.4,00,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.22557/2011/இ1

**தீர்மான எண் : 85 – அனுமதிக்கப்பட்டது.**

11. இந்நகராட்சிக்குட்பபட்ட பேலஸ்ரோடு, ஹோம் சர்ச்ரோடு, டவர் ஜங்ஷன் வரை மற்றும் விக்டோரியா பிரஸ்ரோடு ஆகிய சாலைகள் மழையினால் சேதமடைந்து குண்டும் –குழியுமாக உள்ளது. இதனால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருப்பதால் மேற்கண்ட சாலைகளில் தார் ஒட்டும் பணிமேற்கொள்ள உத்தேசமதிப்பீடு தொகை ரூ.4,50,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம். கோப்பு எண்.22565/2011/இ1

**தீர்மான எண் : 86 – அனுமதிக்கப்பட்டது.**

12. இந்நகராட்சிக்குட்பட்ட டிஸ்டில்லரிரோடு, ஆராட்டுரோடு மற்றும் கொம்மண்டையம்மன்கோவில் தெரு ஆகிய இடங்களில் மழையினால் சாலை சேதமடைந்து சாலைகள் குண்டும் குழியுமாக பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால், மேற்கண்ட சாலைகளில் தார் ஒட்டும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,00,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்புஎண்.22558/2011/இ1

**தீர்மான எண் : 87 – அனுமதிக்கப்பட்டது.**

13. இந்நகராட்சிக்குட்பட்ட ஜேக்கப்தெரு, ராஜாக்கமங்கலம் முதல் சூரங்குடி வரை உள்ள இணைப்பு சாலை மற்றும் அனந்தம் பாலம்முதல் சானல் கரை சாலை வரை உள்ள சாலைகள்மழையால் மிகவும் சேதமடைந்து வாகன போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால், மேற்கண்ட சாலைகளில்தார் ஒட்டும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> மன்றம் அனுமதி வழங்கலாம். கோப்பு எண்.22559/2011/இ1

**தீர்மான எண் : 88 – அனுமதிக்கப்பட்டது.**

14. இந்நகராட்சிக்குட்பட்ட ஏ,ஆர்.கேம்ப் ரோடு மற்றும் தட்டான்விளைரோடு ஆகிய சாலைகள்மழையால் சேதமடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. அதனால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால், மேற்படி சாலைகளில் தார் ஒட்டும் பணிமேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,50,000/– ற்கு தகுந்த மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.22561/2011/இ1

**தீர்மான எண் : 89 – அனுமதிக்கப்பட்டது.**

15. இந்நகராட்சிக்குட்பட்ட கோர்ட்ரோடு மற்றும் வாட்டர் டாஙக் ரோடுகள் மழையில் மிகவும் பாதிக்கப்பட்டு பொதுமக்கள் பயணிக்க மிகவும் சிரமமாக இருப்பதால் மேற்படி இடஙகளில் தார் ஒட்டும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,00,000/– ற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்புஎண்.22562/2011/இ1

**தீர்மான எண் : 90 – அனுமதிக்கப்பட்டது.**

16. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண் கார்மல் மவுண்ட் சாலை மற்றும் காந்திதெரு ஆகிய சாலைகள் மழையினால் சேதமடைந்து மக்களுக்கும், போக்குவரத்திற்கும், இடையூறாக இருப்பதால் மேற்கண்ட சாலைகளில் தார் ஒட்டும் பணி மேற்கொள்ள ரூ.5,00,000/– ற்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

கோப்புஎண்.22563/2011/இ1

**தீர்மான எண் : 91 – அனுமதிக்கப்பட்டது.**

17. இந்நகராட்சிக்குட்பட்ட சற்குணவீதி, ஜவகர்தெரு, ராஜாக்கமஙகலம் இணைப்பு சாலை மற்றும் கோவில் சாலை மழையால் பழுதடைந்து போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கும் இடையூறாக இருப்பதால் மேற்கண்ட சாலைகளில் தார் ஒட்டும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4,50,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்புஎண்.22564/2011/இ1

**தீர்மான எண் : 92 – அனுமதிக்கப்பட்டது.**

18. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட உரிம இனஙகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணை ( நிலை ) எண்.181 நாள் 19.09.2008 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை ந.க.எண்.48233/2006/ஆர்.3 நாள் 17.02.2009 மற்றும் 18.02.2009 – ல் கண்ட நெறிமுறைகளுக்குட்பட்டும், மேற்படி அரசாணை மற்றும் சுற்றறிக்கையினை அடிப்படையாக கொண்டு தயார் செய்யப்பட்டு 06.01.2009 – ம் தியதிய நகர்மன்ற தீர்மானம் எண்.783– ன் படி ஒப்புதல் பெறப்பட்ட 2009–10 ஆண்டு ஏல அறிக்கையில் கண்ட சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு 2012– 13 முதல் 2014–2015 – ம் நிதியாண்டு வரை ( 2013– 2014 – ம் நிதியாண்டிற்கு 2012–2013 – ம் நிதியாண்டு கேட்பில் 5 சதவீதம் உயர்வு செய்தும் , 2014–2015 – ம் நிதியாண்டிற்கு 2013–2014– ம் நிதியாண்டு கேட்பில் 5 சதவீதம் உயர்வு செய்தும் ) அனுபவித்துக் கொள்ள பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | உரிம இனம் விபரம் | ஏல பொறுப்பு தொகை ரூ | தேசியமய மாக்கப்பட் ட வஙகி உத்திரவாத சான்று தொகை ரூ | ஒப்பந்த பதிவு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| (1) | (2) | | | |
| | **<u>சந்தைகள்</u>** | | | |
| | 1. வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 12,00,000 | 30,00,000 | 2,00,000 |
| | மின்சாரகட்டணம் டெப்பாசிட் | 1,00,000 | | |
| | 2. வடசேரி தினசரி மீன் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2,00,000 | 4,00,000 | 10,000 |
| | 3. வடசேரி சந்தையில் உள்ள ஆறு பழக்காய் உறை குழிகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2,00,000 | 10,00,000 | 30,000 |
| | 4. சரலுார் மாட்டு சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 50,000 | 1,50,000 | 3,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | <u>பேருந்து நிலையங்கள் தொடர்புடையது</u> | | | |
| | 1. வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் 3 பிளாட் பாரத்தில் 4 எடை இயந்திரங்கள் வைத்துக் கொள்ளும் உரிமம் | 15,000 | 30,000 | 1000 |
| | 2. வடசேரி கிறிஸ்டோபர் பழைய பேருந்து நிலைய ஆம்னி பேருந்து நுழைவு கட்டணம் வசூல் உரிமம் | 50,000 | 1,50,000 | 1,000 |
| | 3. <u>இறைச்சி கடைகள்</u> | | | |
| | 1, இளஙகடை ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 5,000 | 50,000 | 250 |
| | 2. இளஙகடை மாடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 5,000 | 50,000 | 250 |
| | 3.வடசேரி இறைச்சிக்கடை எண்.1 முதல் 8 வரை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 8,000 | – | 500 |
| | 4. இளஙகடை இறைச்சிக்கடை எண் 1 முதல் 4 வரை கட்டணம் அனுபவிக்கும் உரிமம் | 3,000 | – | 200 |
| | 5. கிருஷ்ணன்கோவில் மாடு இறைச்சிக்கடை எண் 1 முதல் 6 வரை அனுபவிக்கும் உரிமம் | 5,000 | – | 250 |
| | <u>கார் நிலையம் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடம்</u> | | | |
| | 1. பெரிய பூஙகா வாடகை கார் நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 5,000 | 25,000 | 500 |
| | 2. வடசேரி வாடகை கார் நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 5,000 | 15,000 | 500 |
| | 3. அனாதை மடத்தில் செயல்படும் லாறி நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 50,000 | 1,00,000 | 2500 |
| | 4. வடசேரி பேருந்து நிலையத்தில் உள்ள பழைய ( வடக்கு பக்கம் ) சைக்கிள் ஸ்டாண்ட் – ல் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,00,00 | 4,00,000 | 5,000 |
| | <u>கட்டண கழிவறைகள்</u> | | | |
| | 1. அண்ணா பேருந்து நிலைய கட்டண கழிவறை மற்றும் குழியலறைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,00,000 | 4,00,000 | 15,000 |
| | 2. பெரிய பூஙகா ( சர்.சி.பி.ராமசுவாமி ஐயர் நினைவு பூஙகா) வில் உள்ள கட்டண கழிவறை மற்றும் குழியலறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50,000 | 2,00,000 | 15,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 3. வடசேரி சந்தையில் உள்ள கட்டண கழிவறை மற்றும் குழியலறைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.<br>4. அண்ணா விளையாட்டு மைதானத்தினு வடக்கு பக்கம் உள்ள கழிவறை மற்றும் குழியலறைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.<br>5. கோட்டார், ராஜபாதை ரெயில்வே ரோடு கட்டண கழிவறைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.<br>6. கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்<br>7. கோட்டார் பாரவுந்து நிலைய கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 50,000<br>15,000<br>30,000<br>2,50,000<br>5,000 | 2,00,000<br>1,00,000<br>1,00,000<br>4,00,000<br>10,000 | 6,000<br>2500<br>10,000<br>15,000<br>– |
| | <u>மரஙகளின் மேலாதாயம்</u><br>1. வடிவீஸ்வரம் நீராளிகுளம் கரையிலுள்ள பலன்தரும் மரஙகளின் மேலாதாயம் அனுபவிக்கும் உரிமம் | 2,000 | – | 500 |
| | <u>இதர இனஙகள்</u><br>1. வடசேரி மற்றும் அண்ணா பேருந்து நிலையஙகளில் தின்பண்டம் உரிமம் மற்றும் வடசேரி பேருந்து நிலைய பூ விற்பனை உரிமம்<br>2. சரலூர் காய்கறி மற்றும் மீன் சந்தை தென்புற காலியிடத்தினை அனுபவிக்கும் உரிமம் | 50,000<br>15,000 | –<br>30,000 | 1000<br>1,000 |

<u>அலுவலக குறிப்பு</u> – 1. 2009–2010 ஆம் ஆண்டு ஏல அறிக்கையில் கண்ட விபரப்படியான ஏலம/ஒப்பந்தப்புள்ளி வைப்பு தொகை மற்றும் வஙகி உத்திரவாத சான்று மற்றும் பதிவு கட்டணம் தொடர மன்றம் அனுமதி வழஙகலாம்.

2. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை தொடர்பாக எவரும் நீதிமன்றத்தில் வழக்கு தொடராது இருக்க நகராட்சி வழக்குறைஞர் மூலம் நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

3. ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரஙகளை மாநில/ மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அலுவலகம் வழி தினசரி நாளிதழ் மற்றும் மாநில/ மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் விளம்பர படுத்திடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

4. உள்ளாட்சி தல நிதி தணிக்கை ஆய்வர் கடிதம் எண் 116/2010/அ2 நாள் 24.01.2011.ன் படி உரிமத்தொகையில் வருமான வரியாக 2 % மற்றும் மேல்வரி 1 % மற்றும் கல்வி வரி 2% ஏலம் ஊர்ஜித்து உத்தரவு வழஙகப்பட்ட 30 தினஙகளுக்கு உரிமதாரர் செலுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனைக்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

5. உரிமம் ஊர்ஜிதம் செய்த 30 தினங்களுக்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தை பதிவு செய்து கொடுத்து பதிவு கட்டண தொகையினை திரும்ப பெற்றுக்கொள்ளவும், அவ்வாறு பதிவு செய்து கொடுக்கப்பெறாத நிலையில் உரிமம் ரத்து செய்து மறு ஏலம் விடவும், மறு ஏல வகையில் நகராட்சிக்கு ஏற்படும் இழப்பிற்கு முந்தைய ஏலதாரரை பொறுப்பாக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

6. நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கை ந.க.எண்48233/2006/ஆர்.3 நாள் 17.02.2009 மற்றும் 18.02.2009 –ன் படி உரிம தொகை கடந்த ஆண்டு (2011–2012 ) உரிம தொகையினை காட்டிலும் மற்றும் மூன்றாண்டு சராசரியினை விடவும் ( இரண்டையும் விட ) அதிகமாக இல்லாத நிலையில் காலதாமதத்தினை தவிர்க்கும் விதமாக உடன் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

7. குத்தகை / உரிமம் தொடர்பாக அவ்வப்போது ஏல அறிக்கைகள் தயார் செய்வதனை முடிவிற்கு கொண்டுவர ஏதுவாக குடிநீர் துணை விதிகள் ( By law ) மன்ற அனுமதி பெறப்பட்டு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வது போன்று நிலையான குத்தகை / உரிமம் தொடர்பான நிரந்தர ஏல அறிக்கை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக அறிவுரை பெற்ற தயார் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

8. எதிர் காலத்தில் மாவட்ட அரசிதழில் ஏல அறிக்கை பிரசரிக்கும் நிலையில் 2012–2013 – ம் ஆண்டு ஒப்படைக்கப்படும் உரிமம் அதனை கட்டுப்படுத்தும் என்ற நிபந்தனையுடன் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

9. 2010–2011 – ல் கீழ்கண்ட உரிம இனங்கள் ஏலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் அவைகள் தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைபடி 2013–2014 – ல் ஏலம் விடப்படவேண்டும் என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்காக

1. சரலூர் மாட்டு சந்தை தென்புறம் உள்ள தினசரி மீன் சந்தை மற்றும் காய்கறி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

2. வடசேரி பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி கள் வைத்து விளம்பரம் செய்யும்உரிமம்

3. பழைய ஆடு மாடு அடிக்கும் சாலை மற்றும் நவீன முறையில் கட்டப்பட்ட ஆடு, மாடு அடிக்கும் சாலையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

4. கோட்டார் பாரவுந்து நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

5. வடசேரி பேருந்து நிலையத்தின் தெற்கு பக்கம் உள்ள புதிய சைக்கிள் ஸ்டாண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

6. கே.பி.ரோடு கட்டண கழிவறை மற்றும் கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

7. வட்டவிளை அனாதைமடம் மணக்குடி ரோடு ஆகிய இடங்களில் உள்ள பலன்தரும் மரங்களின் மேலாதாயம் அனுபவிக்கும் உரிமம்.

8. உயர் நிலை தாங்கியில் உள்ள பலன்தரும் மரங்களிள் மேலாதாயம் அனுபவிக்கும் உரிமம்

9. கண்டன் சாஸ்தா பூங்கா ( குறுந்தெரு) – ல் உள்ள பலன்தரும் மரங்களின் மேலாதாயம் அனுபவிக்கம் உரிமம்.

10. வடசேரி காந்தி மருத்துவமனையிலுள்ள பலன் தரும் மரங்களின் மேலாதாயம் அனுபவிக்கும் உரிமம்.

11. வட்டவிளை தாய், சேய் நலவிடுதி அருகில் உள்ள பலன்தரும் மரங்களின் மேலாதாயம் அனுபவிக்கும் உரிமம்.

12. கோட்டார் கூழக்கடை தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

**தீர்மான எண் : 93 – அனுமதிக்கப்பட்டது.**